இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 18.12.2025

# காந்தியின் ராம ராஜ்யமும், பா.ஜ.க.வின் வதை ராஜ்யமும்!

“காந்தி விரும்பியது ராம ராஜ்யம்தான். அவருக்கு விருப்பமான ராமர் பெயரைத் தானே வைத்திருக்கிறோம்” என்று ஒன்றிய அமைச்சர் ஒருவர் நாடாளுமன்றத்தில் சொல்லி இருக்கிறார். அவருக்கு காந்தியையும் தெரியவில்லை. அவர் சொன்ன ராமராஜ்யமும் புரியவில்லை.

‘மகாத்மா காந்தி 100 நாள் வேலை உறுதித் திட்ட’த்தின் பெயரை ‘விக்சித் பாரத் ராம்ஜி திட்டம்’ என்று மாற்றிவிட்டார்கள். காந்தியின் பெயரைப் பார்த்தால் அவர்கள் கண்ணுக்கு எரிச்சலாக இருக்கிறது. அதனால் அதனைத் தூக்கி விட்டார்கள். துண்டித்து விட்டார்கள். அதற்காக அவர்கள் சொன்ன காரணம் தான் அவர்களது அறியாமையைக் காட்டுகிறது.

காந்தியடிகள் சொன்ன ராமராஜ்யம் வேறு. இன்று பா.ஜ.க. செய்து கொண்டிருக்கும் வதை ராஜ்யம் வேறு.

**1.இந்தியாவில் இந்துக்கள் தவிர வேறு யாரும் வாழக்கூடாது என்று இந்துக்கள் யாராவது நினைத்தால் அவர்கள் தங்கள் மதத்தையே அழிக்கிறார்கள்.**

**2.தீண்டாமை என்ற விஷம் இந்த மதத்துக்குள் புகுத்தப்பட்ட போதே அதன் சரிவும் தொடங்கிவிட்டது.**

**3. ஒவ்வொருவனும் தனது சமயத்தின் உண்மையை அறிந்து, போலிக் குருக்களின் போதனையைக் கேளாமல் இருந்தால் சச்சரவுக்கு இடம் இருக்காது.**

**4. இந்து-முஸ்லிம் ஒற்றுமை, சத்தியாகிரகம் ஆகிய இரண்டுக்குமே என் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன்.**

**5. தனிநபர் செய்த குற்றத்தை ஒரு சமூகத்தின் மீது சுமத்தாமல் இருப்போமாக.**

**6. சூத்திரர்கள் வேதம் படிக்கக்கூடாது என்ற தடையை நான் ஆதரிக்க முடியாது. நாம் அந்நியர்க்கு அடிமையாக இருந்து வரும் வரையில் அனைவருமே சூத்திரர்களே.**

**7. இன்றைய சாதி முறை, வர்ணாசிரமத்துக்கு விரோதமானது.**

**8. நான் கொல்லப்பட்டாலும் கூட ராமா, ரகீம் என்ற பெயர்களை அடிக்கடி உச்சரிப்பதை விடமாட்டேன். அவ்விரண்டும் ஒரே கடவுளின் பெயர்கள்.**

**9. இந்துஸ்தான் இந்துக்களுக்கு, பாகிஸ்தான் முஸ்லீம்களுக்கு என்று ஆனால் இரண்டுமே விஷம் வழிந்தோடும் நாடாகிவிடும்.**

**10. அரசியலில் மதத்தைக் கலந்த பாவத்தைச் செய்தது நான்தான். அதற்கான தண்டனையை நான் அனுபவித்துத்தான் ஆக வேண்டும்.**

இப்படிச் சொன்னவர் காந்தியடிகள். அவரது சொல்லில் ஒன்றைக்கூட ஏற்றும் கொள்ளுமா பா.ஜ.க.?

“இந்தியாவில் இந்துக்களைத் தவிர வேறு யாருக்கும் இடமில்லை என்று இந்துக்கள் நினைப்பதாயிருந்தால், இந்துக்களல்லாதவர்கள், முக்கியமாக முஸ்லிம்கள் இங்கே வாழ விரும்பினால் இந்துக்களின் அடிமைகளாகத்தான் வாழ வேண்டும் என்று நினைத்தால், இந்துக்கள் இந்து மதத்தையே கொன்று விடுகிறார்கள்.

இதேபோன்று பாகிஸ்தானில் முஸ்லிம்களுக்கு மாத்திரமே நியாயமான உரிமை உண்டு என்று பாகிஸ்தான் நம்பினால், முஸ்லிம் அல்லாதவர்கள் தங்களுக்குத் தாழ்ந்தவர்களாகவும் தங்கள் அடிமைகளாகவுமே வாழ முடியும் என்று நம்பினால், இந்தியாவில் இஸ்லாமுக்கு சாவு மணி அடித்துவிட்டதாகவே ஆகும்” என்று சொன்னவர் காந்தியடிகள். இதனை ஏற்றுக் கொள்ளுமா பா.ஜ.க.வின் மதவாத அரசியல்?

**“ராமராஜியம் என்று நான் கூறுவது இந்து ராஜ்ஜியத்தை அல்ல. ராம ராஜ்ஜிய தெய்வீக ராஜ்ஜியம், கடவுளின் ராஜ்ஜியம் என்று நான் கூறுகிறேன். எனக்கு ராமரும் ரஹீமும் ஒரே கடவுள். சத்தியமும் நீதியும் கொண்ட ஒரே கடவுளைத் தவிர வேறு எந்தக் கடவுளையும் நான் ஒப்புக்கொள்ளவில்லை.**

என் கற்பனையில் ராமர் இந்த பூமியில் வாழ்ந்தாரோ இல்லையோ, ராம ராஜ்ஜியத்தின் பண்டைய இலட்சியம் சந்தேகத்திற்கு இடமின்றி உண்மையான ஜனநாயகத்தின் ஒரு இலட்சியமாகும், அதில் மிகவும் கீழ்த்தரமான குடிமகனும் விரிவான மற்றும் விலையுயர்ந்த நடைமுறை இல்லாமல் விரைவான நீதியை உறுதி செய்ய முடியும்” என்று சொன்னவர் அண்ணல்.

“ஒரு சிலர் மட்டுமே செல்வத்தில் மூழ்கி, மக்கள் போதுமான அளவு சாப்பிட முடியாத அளவுக்கு சமத்துவமின்மை நிறைந்த தற்போதைய நிலையில் ராம ராஜ்ஜியம் இருக்க முடியாது” என்று சொன்னார்.

**ஆனால் பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் இந்திய நாட்டின் நிலைமை என்ன? பா.ஜ.க. ஆட்சியின் தவறான செயல்பாடுகளால் கிராமப்புற, நகர்ப்புற மக்களின் வறுமை அதிகமாகி இருக்கிறது. வேலையின்மை அதிகம் ஆகி இருக்கிறது. அனைத்துப் பொருட்களின் விலையும் அதிகமாகி இருக்கிறது. பணக்காரர்களை அதிக பணக்காரர்களாகவும், ஏழைகளை அதிக ஏழைகளாகவும் மாற்றி இருக்கிறது மோடி அரசின் பொருளாதார நடவடிக்கைகள். சமத்துவமின்மையே அனைத்து நிலைகளிலும் அதிமாகி இருக்கிறது.**

பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், சிறுபான்மையினர், பெண்கள், இளைஞர்கள், உழவர்கள் ஆகியோர் பா.ஜ.க. அரசால் கண்டுகொள்ளப்படவில்லை. அவர்களுக்காக சிறப்புக் கவனிப்புத் திட்டங்கள் இல்லை. கல்வியை முன்னேற்றத்தில் இருந்து பின் தங்கிய காலத்துக்கு கொண்டு செலுத்தத் திட்டமிடுகிறார்கள்.

**வரிப் போடுவது. அதற்கும் மேல் வரிப் போட்டு வதைப்பதே ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஒற்றை நடவடிக்கையாக இருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தையும் அதன் விழுமியங்களையும் மதிப்பதே இல்லை. மாநிலங்களை கழிப்பறைகளை விடக் கேவலமாக நினைக்கிறார்கள். இனம், மொழி, பண்பாடு என பலதரப்பட்ட மக்கள் வாழும் நாடு என்ற எண்ணத்தையே மறந்து, ஒற்றைத் தன்மை கொண்டதாக மாற்றத் துடிக்கிறார்கள்.**

மதம் நீங்கலாக அனைத்தும் காலில் போட்டு மிதிக்கப்படுகிறது. தனது சகிப்பின்மையை அவதூறுகளாக வெளிப்படுத்தி சமூகத்தில் சக மனிதனை விரோதிகளாக்கி, அமைதியற்ற சூழலை உருவாக்குவதே பா.ஜ.க.வின் பாணியாக இருக்கிறது. அதற்காக சொந்த மதத்தினருக்கு நன்மை செய்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. மத உணர்வுகளைத் தூண்டி, ஒரு சில கார்ப்பரேட் கம்பெனிக்கு அரசு மூலதனத்தை திருப்புவது மட்டுமே ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஒற்றைக் கொள்கையாக இருக்கிறது.

“என்னுடைய இந்து மதம் எல்லா மதங்களையும் மதிக்கக் கற்றுக்கொடுக்கிறது. இதில்தான் ராமராஜ்ஜியத்தின் ரகசியம் இருக்கிறது” என்று சொன்னவர் அண்ணல் காந்தி. நாட்டுக்கு நன்மை செய்ய வேண்டாம், அடுத்தவரை மதிக்க பா.ஜ.க.வால் முடியுமா? அந்த சகிப்புத் தன்மையாவது உண்டா அவர்களுக்கு?



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (17.12.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பேராயர் ஜோ. அருண், துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் மற்றும் உறுப்பினர்கள் சந்தித்து, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு சிறுபான்மையின மக்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்து அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட “தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் 38 மாவட்ட கள ஆய்வு அறிக்கை 2025”யை வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், துறை செயலாளர் எ. சரவணவேல்ராஜ், துறை ஆணையர் திருமதி மு. ஆசியா மரியம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## எங்களது யு.பி.ஏ. அரசு விவசாயத் தொழிலாளர்களுக்கு கொடுத்த

# அட்சய பாத்திரத்தை, பிச்சைப் பாத்திரமாக மாற்றிவிட்டது பா.ஜ.க. அரசு!

## ‘மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி’ திட்ட பெயர் மாற்ற விவாதத்தில்

# கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**புதுடெல்லி, டிச.18–**

**மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டம் என்ற நூறு நாள் வேலை திட்டத்தின் பெயரிலிருந்து மகாத்மா காந்தியின் பெயரை நீக்கி, அதில் பல மாற்றங்களை கொண்டு வந்து புதிய சட்ட மசோதாவை தாக்கல் செய்துள்ளது ஒன்றிய அரசு.**

**இதன் மீதான விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி மக்களவையில் உரையாற்றினார்.**

**இதில் கனிமொழி கருணாநிதி ஆற்றிய உரை வருமாறு :–**

“ஒரு மனிதனுக்கு வாழும் உரிமை என்பது, கண்ணியத்தோடு வாழ்வதையும் சேர்த்துதான் என உச்சநீதிமன்றம் 1985லயே தெரிவித்திருக்கிறது.

பொருளாதார மேதை அமர்த்தியா சென் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் பற்றிய ஒரு விவாதத்தில் பேசும் போது, இதுபோன்ற சமூக பாதுகாப்பு திட்டங்கள் தான் விவசாயி தொழிலாளர்களை வேலை இழப்பிலிருந்து காக்கின்றது என்று குறிப்பிட்டார்.

இன்று நீங்கள் தாக்கல் செய்திருக்கும் இந்த மசோதா ஏழை விவசாய தொழிலாளர்களின் கண்ணியத்தையும், அவர்களது வேலை உரிமையையும் தட்டிப் பறித்து விட்டது.

### விபரீத பாரதம்!

ஒவ்வொரு சட்ட மசோதாவை இந்த அரசு கொண்டு வரும்போதும் ஹிந்தி அல்லது சமஸ்கிருத மொழியிலேயே பெயர் வைக்கிறீர்கள். ஏன் ஒரே ஒரு சட்ட மசோதாவுக்காவது தென்னிந்திய மொழிகளில் பெயர் வைத்தால் என்ன? ஒரே ஒரு சட்ட மசோதாவின் பெயராவது தமிழில் இருக்கிறதா? தெலுங்கில் இருக்கிறதா? கன்னட மொழியில் இருக்கிறதா? மராட்டிய மொழிகள் இருக்கிறதா? ஒடிசா மொழியில் இருக்கிறதா? நீங்கள் இந்தி மற்றும் சமஸ்கிருதத்தை திணிக்கவே விரும்புகிறீர்கள்.

இது வளர்ச்சி பாரதம் அல்ல விபரீத பாரதம்... வஞ்சிக்கப்படும் பாரதம்.

தொழிலாளர் விரோத அரசு விவசாய தொழிலாளர்களுக்கு எதிராக கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த சட்ட மசோதாவை முற்றிலுமாக நான் மறுதலிக்கிறேன், எதிர்க்கிறேன்.

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் என்ற அந்தப் பெயரிலேயே... வேலைவாய்ப்பு உறுதி என்பது தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

முதலில் இருந்த சட்ட மசோதா வேலை கேட்பவர்களுக்கு வேலை தருகிற திட்டமாக இருந்தது.

ஆனால் இப்போது நீங்கள் கொண்டு வந்திருப்பது அதிகாரங்களை கொண்டு போய் ஒன்றிய அரசின் கையிலே குவிக்கும் வகையில் மாற்றப்பட்டிருக்கிறது.

கூட்டாட்சி என்பது அதிகாரங்களை பகிர்ந்து கொள்வது, அதிகாரங்களை பறித்துக் கொள்வதல்ல, அதிகாரங்களை குவித்துக் கொள்வதல்ல என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கிராமப்புறங்களில் இந்தத் திட்டத்தை 100 நாள் வேலை திட்டம் என்றுதான் அழைக்கிறார்கள். இதன்படி முதியவர்கள் வேலைக்கு செல்ல முடியாதவர்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள் இவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது.

ஆனால் நீங்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதா இவர்களுக்கெல்லாம் எதிரான ஒன்றாக மாநில சுயாட்சியை கெடுக்கக் கூடிய ஒன்றாக, ஏழை மக்களுக்கு எதிரான ஒரு சட்டமாக இங்கே கொண்டுவரப்படுகிறது.

இந்த சட்ட மசோதாவின் 4,5 பிரிவுகளில், இந்த திட்டத்தின் கீழ் எந்த மாநிலத்திற்கு எவ்வளவு வேலை வாய்ப்புகளை வழங்கலாம் என்று ஒன்றிய அரசே முடிவு செய்யும் என சொல்லப்பட்டிருக்கிறது. எந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு எவ்வளவு வேலை வாய்ப்பு வழங்கலாம் என்பதை நீங்கள் தீர்மானிப்பீர்கள்.

### வ.உ.சி.யை உங்களுக்கு யார் என்றே தெரியாது!

உங்களுக்கு வ.உ.சி. என்றாலே யார் என்று



தெரியாது. செக்கிழுத்த செம்மல் என்றால் யார் என்று தெரியாது. தேர்தல் வந்தால் மட்டும் தான் உங்களுக்கு தமிழ்நாட்டின் ஞாபகம் வரும். தமிழ்நாட்டிலே வந்து தமிழராக பிறக்கவில்லையே என்று வருத்தப்படுவீர்கள்.

ஆனால் பீகார் மாநிலத்தில் தேர்தல் நடந்தால் அங்கே போய், தமிழர்கள் பிகாரிகளுக்கு எதிரானவர்கள் என்று பேசுவீர்கள். ஒடிசாவில் தேர்தல் நடந்தால் அங்கே போய், தமிழர்கள் இங்கே அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கிறார்கள் என்று பேசக்கூடியவர்கள் நீங்கள்.

இப்படி மாநிலங்களைப் பற்றி குறிப்பாக தமிழ்நாட்டைப் பற்றி எந்தவித அக்கறையும் இல்லாத நீங்கள் எப்படி தமிழ்நாட்டிலே நாகப்பட்டினத்தில், தஞ்சாவூரில், தூத்துக்குடியில், திருநெல்வேலியில், நாங்குநேரியில் கிராமங்களில் உள்ள மக்களின் வேலை தேவைகளை புரிந்து கொண்டு ஒதுக்கீடு செய்வீர்கள் என்று எனக்கு சொல்லுங்கள்.

மாநில அரசு அங்கே இருக்கக்கூடிய தேவைகளுக்கு ஏற்ப இத்தனை நாட்களாக வேலைவாய்ப்பை வழங்கிக் கொண்டிருந்தது. இப்போது அந்த உரிமையையும் மாநிலங்களிடமிருந்து பறிக்கும் வகையில் இந்த மசோதாவை கொண்டு வந்திருக்கிறீர்கள்.

### மாநில உரிமைகள் – மாநில சுயாட்சி அழிக்கப்படுகிறது!

நீங்கள் கொண்டுவரும் அனைத்து மசோதாக்களிலும் மாநில உரிமைகள் மாநில சுயாட்சி அழிக்கப்படுகிறது ஒழிக்கப்படுகிறது.

யூபிஏ அரசாங்கத்திலே நாங்கள் கொண்டு வந்த மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தில், தொழிலாளர்களுக்கான சம்பளம் என்பது முழுமையாக ஒன்றிய அரசின் பொறுப்பில் இருந்தது. ஆனால் இப்போது இந்த மசோதா 60: 40 என அந்த விகிதத்தை மாற்றி அமைத்திருக்கிறது.

இத்தனை ஆண்டுகளாக பாஜக அல்லாத மாநில அரசுகளுக்கு இந்த தொகையை சரியான நேரத்தில் வழங்காத நீங்கள், இனி வழங்குவீர்கள் என எந்த நம்பிக்கையில் நாங்கள் இருக்க முடியும்?

அதுமட்டுமல்லாமல், இந்தத் திட்டத்தின் கீழ் 75% நிதியை ஒன்றிய அரசு வழங்கும், மீதி இருக்கும் 25 % நிதியை உபகரணங்களுக்காக மாநில அரசு வழங்கும் என்ற நிலையை மாற்றி... 60: 40 என மாற்றுவதற்கான காரணம் என்ன? வேலை வாய்ப்புகளை மாநில அரசுகள் அதிகரித்தால் அதற்கான ஒரு தொகையை மாநிலங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை எப்படி நியாயமாக இருக்க முடியும்?

ஏனென்றால் தொடர்ந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதியை நீங்கள் குறைத்துக் கொண்டே வந்து கொண்டிருக்கிறீர்கள்.

89 சதவீதத்திலிருந்து இன்று 79% ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. செஸ் இல் இருந்து வரக்கூடிய நிதியை ஒவ்வொரு ஆண்டும் அதிகமாக எடுத்துக் கொள்வது ஒன்றிய அரசான நீங்கள்தான்.

மாநிலங்களுக்கு வரக்கூடிய வருமானத்தை குறைக்கக்கூடிய அதே நேரத்திலே, மாநில அரசுகளின் செலவுகளை அதிகரிக்க வைக்கும் சூழலை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

மாநில அரசுக்கு 39 சதவிகிதம் நிதி வழங்கிவிட்டு பிரதம மந்திரி பெயரில் திட்டம்!

60: 40 என்று சொல்கிறீர்கள். பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம் என்று ஒரு திட்டத்திற்கு பெயர் வைத்திருக்கிறீர்கள். ஆனால் அந்தத் திட்டத்தின் கீழ் 61% நிதியை வழங்குவது மாநில அரசு. ஒன்றிய அரசு வழங்குவது 39 சதவீதம் தான்.

அதேபோல பிரதான் மந்திரி மத்திய சம்பத்த யோஜனா. இந்தத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு வழங்குவது 27 சதவீதம் மட்டும் தான். இதில் தமிழ்நாடு மாநில அரசு வழங்குவது 73 சதவீத நிதி.

முதியோர் உதவித் தொகையில் ஆயிரம் ரூபாய்க்கு மேலாக வழங்குவது எங்களுடைய மாநில அரசு. நீங்கள் கொடுப்பது 200.

ஜல் ஜீவன் மிஷின் திட்டத்தில் 50: 50 என்று சொன்னீர்கள். ஆனால் தமிழ்நாடு மாநில அரசு இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 55 சதவீத நிதியை வழங்கிக் கொண்டிருக்கிறது.

இப்படி ஒவ்வொரு திட்டத்திலும் எங்களை மாநிலங்களை வஞ்சித்துக் கொண்டிருக்க கூடிய ஆட்சி, இந்த மசோதாவின் மூலமாகவும் மக்களையும் மாநிலங்களையும் வஞ்சிக்க தொடங்கி இருக்கிறீர்கள். அதற்கு இதையும் ஒரு வாய்ப்பாக நீங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது, வெட்கமாக இருக்கிறது.

### விவசாயத் தொழிலாளர் நிலையை அறிவீர்களா?

விவசாயப் பணிகள் நடைபெறும் 60 நாட்கள் இந்த திட்டத்தின் கீழ் பணிகள் இருக்காது என்று சொல்கிறீர்கள். விவசாயம் என்றால் என்ன என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

விதைக்கும் நாட்கள், நடவு செய்யும் நாட்கள் என்ற இந்த ஓரிரு நாட்களைத் தவிர அந்த 60 நாட்களில் பெரும்பாலும் விவசாய தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். 60 நாட்களுக்கு வேலை இல்லை என்றால் அந்த விவசாய தொழிலாளியின் நிலை என்ன என்பதை சற்று நேரமாவது நீங்கள் சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா என உங்கள் மனசாட்சி தொட்டு கேட்கிறேன். இது கூலி பிரச்சினை மட்டுமல்ல. ‘நெகோஷியேசன்’ பவர் என்பதையும் தட்டிப் பறித்திருக்கிறீர்கள் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

நாங்கள் யுபிஏ அரசாங்கத்தில் இந்தத் திட்டத்தை கொண்டு வந்த போது, ஒரு அட்சய பாத்திரத்தை விவசாய தொழிலாளர்களின் கைகளிலே வழங்கியது. அந்த அட்சய பாத்திரத்தை பிடுங்கி கொண்டு விவசாய தொழிலாளர்களின் கையில் பிச்சை பாத்திரத்தை இந்த அரசு திணித்திருக்கிறது.

### நூறுநாள் வேலைத் திட்டத்தில் முழுமையாக வேலை தருகிறீர்களா?

125 நாட்கள் வேலை கொடுப்போம் என்று வேளாண் துறை அமைச்சர் இங்கே பேசினார். உங்களுடைய இந்த ஆட்சியிலே எந்த ஒரு மாநிலத்துக்காவது 100 நாட்களுக்காவது வேலை வழங்கியிருக்கிறீர்களா? இல்லை. 40, 46 நாட்களை தாண்டுவது கிடையாது.

எங்கள் ஊரில் ஒரு சொலவடை சொல்வார்கள். கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன், வானம் ஏறி வைகுந்தம் போவது எப்படி என்று. இதுதான் இங்கே இருக்கக்கூடிய நிலை.

இதையெல்லாம் தாண்டி வெட்கப்படக் கூடிய நிகழ்வாக இந்தத் திட்டத்தின் பெயரில் இருந்து மகாத்மா காந்தியின் பெயரை நீக்கி இருக்கிறீர்கள். தந்தை பெரியார் அவர்கள் மகாத்மா அவர்கள் இறந்தபோது இந்திய தேசத்திற்கு காந்தி தேசம் என்று பெயர் வைக்கவேண்டும் என்று கூறினார். ஆனால் நீங்களோ இந்த திட்டத்தின் பெயரில் இருந்தே காந்தி அவர்களின் பெயரை எடுத்துவிட்டீர்கள். எனவே இதை நான் வன்மையாகக் கண்டனம் செய்கிறேன்” என கனிமொழி கருணாநிதி உரையை முடிக்கும் முன்பே அவருடைய ஒலிபெருக்கி அணைக்கப்பட்டது.